முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருவாரூர்

O.S. No.2/2014 & O.S. No.54/2022

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் நாள் திங்கள்கிழமை

1969-ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 44-ன்படி பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**வா.சா. 4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வம் (எ) விஸ்வாமித்திர செல்வம் | தந்தையார் பெயர் | வைத்திலிங்கம் |
| கிராமம் | கீழதிருப்பாலக்குடி | வட்டம் | மன்னார்குடி |
| தொழில் | | வயது | 56 |

**(சாட்சியின் அடையாளம் சரிபார்க்கப்பட்டது).**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் 3ம் தரப்பினர். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அந்த சாட்சிய நிரூபண வாக்குமூலத்தை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக ஏற்குமாறு வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை (1, 2 பிரதிவாதிகள் தரப்பில்)**

காமாட்சி தேவரும் வீரம்மாளும் நான் பிறப்பதற்கு முன்பே வெளிநாடு சென்று விட்டார்கள் என்றால் சரி. நான் 1994-1995 ல் பாஸ்போர்ட் எடுத்தேன். என்னுடைய பாஸ்போர்ட் நம்பர் எனக்கு ஞாபகமில்லை. காமாட்சி தேவர் குடும்பத்தினருக்கும் எங்கள் குடும்பத்திற்குமிடையே ஆரம்பத்தில் சொத்து பிரச்சனை இருந்ததா என்றால் இல்லை. காமாட்சி தேவர் குடும்பத்திற்குள் சொத்து சம்மந்தமான பிரச்சனை இருந்தது எனக்கு தெரியாது என்றால் தவறு. வீரம்மாளின் பாஸ்போர்டை நான் பார்த்ததில்லை. காமாட்சி தேவர் சிங்கப்பூரின் நிரந்தர குடியுரிமை பெற்றவர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. காமாட்சி தேவர் சிங்கப்பூரில் எந்த துறையில் வேலை பார்த்தார் எங்கு வேலை பார்த்தார் என்றால் சிங்கப்பூரில் PY கேஸ் கம்பெனியில் வேலை பார்த்தார், எப்போது வேலையில் சேர்ந்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. மேற்படி கம்பெனியில் வேலை பார்த்ததற்கான ஆதாரம் என்னிடம் இல்லை. காமாட்சி தேவர் சிங்கப்பூரில் வேலை பார்க்கவில்லை என்றால் முற்றிலும் தவறு. எந்த தேதியிலிருந்த எந்த தேதி வரை காமாட்சி தேவர், வீரம்மாள் வீட்டில் தங்கியிருந்தேன் என்றால் சொல்ல முடியாது என்று இல்லை, ஞாபகமில்லை. நான் சிங்கப்பூரே

போகவில்லை எனவும் காமாட்சி தேவர், வீரம்மாள் வீட்டிற்கு செல்லவில்லை எனவும் எங்கள் குடும்பத்திற்கும் காமாட்சி தேவர் குடும்பத்திற்கும் சொத்து பிரச்சனை இருந்ததால் நான் அவர்கள் வீட்டிற்கு செல்லவில்லை எனவும் அவர்கள் குடும்பத்தை பற்றி எந்தவித சங்கதியும் எனக்கு தெரியாது எனவும் சொன்னால் முற்றிலும் தவறு. பாண்டியன் பெயரில் கண்டிதம்பேட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் FD இருந்ததாக என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். அதன் நம்பர் மற்றும் தொகை எனக்கு ஞாபகமில்லை, இருந்தது உண்மை. எந்த FD யும் இல்லை எனவும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் எனவும் சொன்னால் தவறு. எனக்கு கீழதிருப்பாலக்குடி, சுந்தரக்கோட்டை கிராமங்களில் விவசாய நிலங்கள் உள்ளன. சுந்தரக்கோட்டையில் சர்வே எண் 3/1ல் 6 மா (2 ஏக்கர்) நிலம் உள்ளது. அதற்கான ஆவணங்கள் என்னிடம் இருக்கிறது. 1984 ல் வீரம்மாள் பெயரில் சொத்து வாங்கப்பட்டது. தேதி, பதிவு எண் ஞாபகமில்லை. வீரம்மாள் பெயரில் 3 சொத்துக்கள் வாங்கினார்கள். 1983, 1984 ல்தான் வீரம்மாள் பெயரில் நிலங்கள் வாங்கப்பட்டது. நான் வெங்கடேசனுடன் நீதிமன்றத்திற்கு நண்பர் என்ற முறையில் பலதடவை வந்துள்ளேனா என்றால் இல்லை. பரவாக்கோட்டை காவல் நிலையத்தில் கு.எண் 136/2016 என்ற எண்ணில் தேசபந்து

மனைவி செந்தமிழ்செல்வி என்பவரால் புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த வழக்கில் நான் விடுதலை செய்யப்பட்டேன். மேற்படி விபரத்தை என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை. தேசபந்து மனைவி என் மீது புகார் கொடுத்த காரணத்தால் அவர்கள்மீது விரோதம் கொண்டு அவர்களுக்கு எதிராக இவ்வழக்கில் வெங்கடேசனுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் இருதரப்பினரும் எனக்கு உறவினர்கள். வீரம்மாள் கிரயம் வாங்கிய சொத்துக்களில் எந்த ஆவணங்களிலும் நான் சாட்சி கையொப்பம் இடவில்லை. 10.02.2013 ல் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு யாதொரு சொத்துக்கள் சம்மந்தமாக சுமதியோ, வீரம்மாளோ என்னை கூப்பிட்டு பஞ்சாயத்து பேச சொல்லவில்லை அந்த தேதியில் யாதொரு பஞ்சாயத்தும் நடைபெறவில்லை என்றால் தவறு. எந்த தேதியில் வீரம்மாள் வெளிநாடு சென்றார் என்று எனக்கு தற்போது ஞாபகமில்லை. சுமதி முதலில் வெளிநாடு போனார். பஞ்சாயத்து பேசி ஒரு வாரத்தில் வெளிநாடு போவதாக சொன்னார். எந்த தேதியில் வெளிநாடு சென்றார் என்று எனக்கு ஞாபகமில்லை. ஒவ்வொரு வாய்தா தேதியிலும் வெங்கடேசனுக்கு ஆதரவாக நான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன் எனவும்

வெங்கடேசன் கேட்டுக் கொண்டதற்கிணங்க வெங்கடேசனுக்கு ஆதரவாக நடக்காத சங்கதிகளை நடந்ததாக நீதிமன்றத்தில் ஆஜராகி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**குறுக்கு விசாரணை (3 பிரதிவாதி தரப்பில்)**

மேற்சொன்ன குறுக்கு விசாரணையே அடாப்ட் செய்யப்படுகிறது.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.08.25 15:45:32 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.